1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (பகுதி-2) (ஆறாவது அறிக்கை);

1975–76 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய மேற்படி குழுவின் அறிக்கை (ஏழாவது அறிக்கை).

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன் :—

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–1976 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (இரண்டாவது அறிக்கை);

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (மூன்றாவது அறிக்கை);

1972–73 முதல் 1975–76 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் அறிக்கை (நான்காவது அறிக்கை);

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1974–75) இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் அறிக்கை (ஐந்தாவது அறிக்கை).

3. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.